**04.02.2026 <u>அசல் வழக்கு எண்.32/2011</u> Starting Time : 12.33 p.m.**

**<u>வா.சா.1 திரு.குமார் த/பெ. சின்னையன்.</u>**

**<u>சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு, பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி.</u>**

**1**). இந்த வழக்கில் நான் 1999ல் வீடு கட்டியதாக கூறியுள்ளபட்சத்தில், 1ம் பிரதிவாதி பழனி வீடு கட்டியிருந்தாரா என்றால் இல்லை, காலி மனையாக தான் இருந்தது. எனது பிரமாண வாக்குமூலத்தில் நான் பரம்பரையாக வீடு கட்டி குடியிருந்து வருகிறேன் என்று கூறியுள்ளபட்சத்தில், யார் வீடு கட்டி அனுபவித்து வருகிறார்கள் என்றால் என் அப்பா தான் வீடு கட்டினார். 1999ல் வீடு யார் கட்டியது என்றால் என் அப்பா தான் கட்டினார். வழக்கு தாக்கல் செய்தபோது, பிரதிவாதி நான்கு அடி சுவர் எழுப்பி கட்டிடம் கட்டியிருந்தார் என்று கூறியுள்ளபட்சத்தில் அதற்கு புகைப்படம் எடுத்தேனா என்றால் எடுத்தேன். அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது தவறு என்றும், புகைப்படங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, நான் எனது வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். எனது வழக்கறிஞர் அதை தாக்கல் செய்துள்ளார்.

**2**). நானும் 1ம் பிரதிவாதி பழனியும் தாவா கிராமத்தில் வசித்து வருகிறோம் என குறிப்பிடுவதற்கு கிராம வரைபடம் ஏதும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது தவறு என்றும், மேற்படி ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன். எனது பிரமாண வாக்குமூலத்தில் 15.2.2010 மற்றும் 16.02.2010 ஆகிய தேதிகளில் பிரதிவாதி தாவா இடத்தில் கடக்கால் மற்றும் சுவர் எழுப்பியுள்ளார் என்று நான் கூறியுள்ளதை எனது தாவாவில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். அவ்வாறு ஏதும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல.

**3**). கடந்த பிப்ரவரி 2010ல் பிரதிவாதி தாவா சொத்தில் கடக்கால் மற்றும் சுவர் எழுப்பினார் என்றும், தாவா சொத்தை அளவீடு செய்ய பிப்ரவரி 2011ல் நான் விண்ணப்பித்தேன் என்று கூறியுள்ளபட்சத்தில், ஒரு ஆண்டாக நான் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் நடவடிக்கை எடுத்துக் கொண்டு தான் இருந்தேன். சர்வேயருக்கு படி கட்டியும் பல காரணங்களால் அளக்க

வரவில்லை என்று நான் கூறியுள்ள பட்சத்தில், என்ன காரணங்களுக்காக சர்வேயர் வரவில்லை என்றால் 2011ல் தான் நான் படி கட்டினேன். சர்வேயர் தாவா சொத்தை அளவீடு செய்தாரா என்றால் அளந்து பார்த்தார், எனக்கு ஒரு சென்ட் இடம் விடவேண்டும் என்றும் கூறினார்.

**4**). 1ம் பிரதிவாதி பழனி 2010லேயே வீடு கட்டிவிட்டார் என்றும், அது தெரிந்தே நான் 2011ல் சர்வேயருக்கு படி கட்டி அளவீடு செய்ய விண்ணப்பித்தேன் என்றால் பழனி வீடு கட்டுவதற்கு ஆரம்பித்ததில் இருந்தே நான் தடுக்க முயற்சித்தேன். நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை எப்போது வந்து பார்வையிட்டார் என்றால் கொரோனா சமயத்தில் வந்து பார்வையிட்டார். நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிடும்போது பிரதிவாதியின் வீடு கட்டி முடிக்கப்பட்டிருந்தது என்றால் சரியல்ல, சுவர் மட்டும் எழுப்பி இருந்தார்கள்.

**5**). நான் குடியிருந்து வரும் வீட்டிற்கு கிழக்கு பக்கம் சுமார் 10 அடி அகலம், 30 அடி நீளம் புறம்போக்கு இடத்தை நான் ஆக்ரமிப்பு செய்து வருகிறேன் என்றால் சரியல்ல, என்னுடைய இடத்தில் தான் அனுபவித்து வருகிறேன். நான் சொல்வது தவறு என்றும், மேற்படி புறம்போக்கு நிலத்தை ஒட்டி தான் என்னுடைய தம்பி வீடு கட்டியுள்ளார் என்றால் சரியல்ல, எங்களது இடத்தில் தான் கட்டியுள்ளார். என்னுடைய வீட்டிற்கும், எனது தம்பி வீட்டிற்கும் இடையில் இடம் உள்ளதா என்றால் இல்லை, ஒட்டி தான் கட்டியுள்ளோம், எனது தம்பி அவரது புறம்போக்கு இடத்தை எனக்கு கொடுத்துவிட்டார். நான் சொல்வது தவறு என்றும், எனது தம்பி அவரது இடத்தை மாரிமுத்து என்பவருக்கு விற்பனை செய்துவிட்டார் என்றால் சரிதான்.

**6**). எனது தம்பி கொடுத்துவிட்ட இடம் புறம்போக்கு இடம் என்றால் சரியல்ல. பட்டா இடத்தை தான் கொடுத்தார், அதில் கொஞ்ச அளவு புறம்போக்கு இடம் ஆகும். அதன் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் ஆவணத்தை பார்த்து தான் சொல்ல முடியும். எனது தம்பியின் பெயர் என்ன என்றால் இரவி. நான் தாக்கல் செய்துள்ள **வா.த.சா.ஆ.2**ஆவணத்தில் சொத்து விவரத்தில், சர்வே எண். 241/17 0.37 சென்ட் பிள்ளையார் கோவில் தெருவில் தெருவிற்கு தெற்கு, முருகேசன் நாயுடு வகையறா நிலத்திற்கு வடக்கு, ஏழுமலை வகையறா காலி மனைக்கு கிழக்கு, என் காலி மனைக்கு மேற்கு மத்தியில் கி-மே வடபுறம் 22 1/2 அடி, தென்புறம் 0 அடி, வ-தெ கிழபுறம் 39 1/2 அடி என்று

குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி அளவுகள் போக மாரிமுத்துவுக்கு எவ்வளவு சொத்து எனது சகோதரா் கொடுத்துள்ளாா் என்றால் அவரை தான் கேட்கவேண்டும். நான் சொல்வது பொய் என்றும், புறம்போக்கு நிலத்தை ஆக்ரமிப்பு செய்துக் கொண்டு எனது தம்பி எனக்கு எழுதிக்கொடுத்ததாக மேற்படி ஆவணத்தை ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல, ஆவணம் பதிவு செய்யப்பட்டுள்ளது. எனது சகோதரா் மாரிமுத்துவிற்கு கொடுத்துள்ள இடம் தான் எனது சகோதரரின் பங்கு என்றும், என் சகோதரா் எனக்கு எழுதிக்கொடுத்ததாக குறிப்பிட்டுள்ள வா.த.சா.ஆ.2 ஆவண சொத்தானது நான் ஆக்ரமிப்பு செய்துள்ள புறம்போக்கு இடம் என்று சொன்னால் சரியல்ல.

**பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞா் கேட்டுக் கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை தொடா்ச்சி ஒத்தி வைக்கப்பட்டது.**

**Ending time : 1.13 p.m.**

Taken down by me in Open court read over to the witness in the presence of the Plaintiff/Defendant and admitted by him/her to be correct.

Sd/-C. Mahalakshmi,
District Munsif,
Vandavasi.